**15.07.2025** **அசல் வழக்கு எண்.37/2014** **Starting Time : 12.30 p.m.**

**பி.வா.சா.2 திரு. கங்காதரன் த/பெ.குண்டன்.**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள தாவா சொத்து சர்வே எண். 58/1எ-ல் 90 செண்ட் நிலத்தை முருகன் என்பவருக்கு கிரயம் அளித்த வரதப்ப செட்டிக்கு கிஷ்டப்ப செட்டி குமாரர் முனிகான் என்பவர் அனுபவித்து வந்து அச்சொத்தை வரதப்ப செட்டிக்கு உயில் சாசனம் எழுதி வைத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. உயில் சாசனம் எழுதிய போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. 1ஆம் பிரதிவாதி அவரது மைனர் மகன் 2ம் பிரதிவாதியின் பெயரில் சொத்துக்களை கிரயம் பெற்ற ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண் மற்றும் சொத்து விவரம் 1ம் பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. மேற்படி 90 செண்ட்டில் எவ்வளவு கிரயம் பெற்றதாக 1ம் பிரதிவாதி என்னிடம் கூறினார் என்றால் 78 1/2 செண்ட் கிரயம் பெற்றதாக என்னிடம் கூறினார். மேற்படி 90 செண்ட்டில் 78 1/2 செண்ட் கிரயம் பெற்றது போக மீதமுள்ள 11 1/2 செண்ட் எந்த பக்கம் நிறுத்தி வைத்துக் கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 சொத்து விவரத்தில் முத்தியாலு கவுண்டர் நஞ்சைக்கு மேற்கு என்று கூறியுள்ளபட்சத்தில், 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற 78 1/2 செண்ட்டுக்கு கிழக்கில் 1ஆம் வாதியின் பூமி உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிலத்திற்கு அருகில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஏரி வாய்க்கால் செல்கிறது. 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற 78 1/2 செண்ட்டுக்கு மேற்கு பக்கம் யார் பூமி உள்ளது என்றால் தனபால் பூமி உள்ளது. வடக்கு தெற்கு பக்கம் யார் பூமி உள்ளது என்றால் வடக்கு பக்கம் பாண்டுரங்கன் பூமியும், தெற்கு பக்கம் ஏரி வாய்க்காலும் உள்ளது.

3. 1ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற 78 1/2 செண்ட் போக மீதமுள்ள உள்ள 11 1/2 செண்ட் பூமி யாருக்கு சொந்தமானது என்றால் வரதப்ப செட்டிக்கு சொந்தமான பூமியாகும். வரதப்ப செட்டி உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். எனது பிரமாண வாக்குமூலத்தில் கண்டிஷன் நிலம் என்று கூறியுள்ளபட்சத்தில், கண்டிஷன் நிலம் என்றால் என்ன என்றால் வரதப்ப செட்டி அனுபவத்தில் உள்ள 11 1/2 செண்ட் கண்டிஷன் நிலம் என்று எங்கள் கிராம மணியக்காரர் சொல்லி தான் எனக்கு தெரியும். வாதி, பிரதிவாதிகளை எனக்கு நன்கு தெரியுமா என்றால் நானும் 1ஆம் பிரதிவாதியும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள்

என்பதால் அவரை எனக்கு நன்கு தெரியும். வாதியை எனக்கு ஓரளவுக்கு தான் தெரியும். வாதியின் தகப்பனார் குப்புசாமி கவுண்டர் கிரயம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகம் பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. கோபால்சாமி குமாரர்கள் கோட்டமுத்து, ராமசாமி, ஆதிமூலம் தெரியுமா என்றால் கோட்டமுத்துவை எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு ஆதியில் இருந்து பாத்யப்பட்ட சொத்துக்கள் என்றும், 1ஆம் பிரதிவாதி அவரது பெயரில் தவறுதலாக பட்டா ஏற்படுத்திக் கொண்டு உரிமை கொண்டாடுவதால் மேற்படி சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிக்கு பாத்யப்பட்டதல்ல என்றாலும், 1ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**Ending time : 12.50 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.